# தொழிலாளர் மக்களாட்சி


செப்டம்பர் - 1-15   மாதமிருமுறை -  மலர் -1   இதழ் -2   மார்க்சிய - லெனினிய - மாவோவிய அரசியல் ஏடு   விலை 10.00

## சிங்கள இனவெறி அரசின்

# கூலிப்படையாக இந்திய இராணுவம்

### மார்க்சிய - லெனினிய - மாவோவிய, தமிழ் தேசிய அணிகளை நோக்கி காலத்தின் அறைகூவல் !






செப்டம்பர் 8 அதிகாலை சுமார் 4 மணியளவில் வவுனியாவின் சிங்கள இராணுவ தலைமையகம் மீது புலிகளின் வான்படை தாக்குதல் நடத்தியது. அத்தாக்குதலுக்கு உதவியாக புலிகளின் தரைப்படையும் ஜோசப் விமானப் படைத்தளத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் சிங்கள வீரர்கள் 20 பேர் பலியாக 30 பேருக்கும் அதிகமானோர் காயமுற்றனர். மேலும் புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்த 10 பேர் பலியாயினர். விடுதலைப் புலிகள் நடத்திய இந்த 7வது விமானத் தாக்குதலில் இந்தியாவில் இருந்து சிங்கள அரசுப் பெற்ற ரேடார் கருவிகளும், தளமும் பலத்த சேதம் அடைந்த என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவற்றையெல்லாம் விட மிக முக்கியமான செய்தியாக ஈழத் தமிழர்களையும், விடுதலைப் புலிகளையும், ஒழிக்க சிங்கள அரசின் கூலிப்படையாக இந்திய இராணுவம் செயல்பட்டு வந்திருப்பது தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

புலிகளின் விமானத் தாக்குதலில் இந்திய இராணுவப் பொறியாளர்கள் ஏ.கே.தாகூர், சிந்தாமணி ரௌத் என்ற இருவர் பலத்த காயமடைந்தனர். மேலும் பலர் காயமடைந்ததாக கருதப்படுகிறது.

சிங்கள பேரினவாத அரசிற்கு இராணுவத் தளவாடங்களையும், தொழில்நுட்ப உதவிகள் மட்டுமல்லாது இந்திய ராணுவம் கூலிப்படையாக இலங்கையில் வலம் வந்து ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க மும்மூரமாக ஈடுபட்டிருப்பது மேலும், மேலும் அம்பலமாகி வருகிறது. 265தொழில் நுட்ப வல்லுநர் குழு அடங்கிய இராணுவத்தினரும் இராணுவ உயர் அதிகாரிகளும், அங்கேயே தங்கி இராணுவ உதவிகள் செய்வதன் மூலம் ஈழப்போர் புதிய பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது. ஈழத்தமிழர் மீதும், விடுதலைப்புலிகள் மீதும், இந்திய அரசும்,இலங்கை அரசும் சிங்கள அரசின் கைக்கூலி கருணா கோஷ்டியும், நேரடிப்போரை தொடங்கியிருக்கின்றனர். இலங்கை அரசிற்கு எவ்வித உதவியும் செய்யவில்லை என்று கூறிக்கொண்டே ராடர்களும், பொருளாதார மற்றும் இராஜதந்திர உதவியல்லாது, நேரடியாக இந்திய இராணுவம் களத்தில் இறங்கியுள்ளது. அதே நேரத்தில் பாதிக்கப்படும் ஈழத்தமிழர்களுக்கு மருந்துப் பொருட்களை தமிழகத்திலிருந்து அனுப்ப தடை போடுகிறது இந்திய அரசு. மேலும் நேரிடையாக இலங்கை இராணுவத்தால் தாக்கப்படும் தமிழக மீனவர்கள் பிரச்சனையில் சிங்கள இராணுவத்தின் செயலை தடுத்து நிறுத்தி தமிழக மீனவர்களைப் பாதுகாக்காமல் இந்திய இறையாண்மைக்கு எதிராக இந்திய இராணுவமே செயல்படுகிறது. மேலும் சிங்கள இராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் தருணங்களில் இந்திய கடலோர காவல் படையும் தமிழக மீனவர்களின் உயிரைக் காக்க தவறுவதால், கூடுதலாக சிங்களப் படையால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதால், நிராயுதபாணியான தமிழக மீனவர்கள் சிங்கள இராணுவத்தை எதிர்த்துப் போரிட வேண்டிய நிலைக்கு தமிழக மீனவர்களை தள்ளி விடுகிறது இந்திய அரசு.

மேலும் கச்சத்தீவில் மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களின் மீதான சிங்கள இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிராக தமிழகம் தன் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தப் பிறகும்,இந்திய அரசு சிங்கள அரசின் கூலிப்படையாக செயல்படுவதன் தார்மீக பின்புலத்தை ஆய்வு செய்வதும், அதை உடைப்பதும் அவசியமாகிறது.

ஜெயவர்த்தனே - இராஜீவ் காந்தியின் மோசடி ஒப்பந்தத்தையும் அதைத் தொடர்ந்து இந்திய அமைதிப்படை என்ற பெயரில் கொலைப்படையாக இந்திய இராணுவம் ஈழத்தில் கால் பதித்து , தோற்கடிக்கப்பட்டு, துரத்தியடிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே. ஈழமக்களின் போராட்டத்தை தமிழகம் ஆதரித்தும், குரல் கொடுத்தும் வந்த சூழலில் ராஜீவ் கொலையை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு ஈழத்தமிழர்களின் போராட்டத்தின் மீதான,தமிழகத்தின் தார்மீக ஆதரவை ஒடுக்கத் துவங்கியது இந்திய அரசு.

மத்தியில் காங்கிரஸ், பா.ஜ.க கும்பலும், தமிழகத்தில் பாசிச ஜெயாவும், கருணாநிதியும் ஈழத்தமிழர்கள் பற்றி சிந்திப்பதையே பயங்கரவாதமாக சித்தரித்து தனது ஒடுக்கும் முறையை தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் தங்களின் போராட்டத்திற்கு தமிழகத்திலிருந்து கிடைக்கும் தார்மீக ஆதரவை இழந்து கடும் பின்னடைவை சந்தித்துகொண்டிருக்கின்றனர் ஈழத்தமிழர்கள். தி.மு.க, ம.தி.மு.க., பா.ம.க ஆகிய காரிய வாத கும்பலின் விளைவாக எவ்வித பயனும் அடைய முடியாத சூழலில், அகதிகளாக தமிழகம் வரும் ஈழத்தமிழர்களும் குற்றவாளிகளாக கருதப்பட்டு, அவர்கள் அசையும் சொத்துக்கள் கூட எதையும் வாங்க முடியாத குற்றவாளிகளாக சித்தரிக்கப்படும் சூழலில் ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு

# மீண்டும் பொடா

## இந்து பயங்கரவாதிகளின் மிரட்டல்




பா.ஜ.க.ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில் பொடா என அறிவித்திருக்கிறார் இந்துமதத் தீவிரவாதி அத்வானி, பெங்களூரில் சமீபத்தில் நடந்து முடிந்த பா.ஜ.கா-வின் தேசிய செயற்குழுவின் கூட்டத்திற்கு பிறகு பொடா சட்டத்தை கொண்டுவருவதில் தனது பிரச்சாரத்தை அதிகப்படுத்தியிருக்கிறது பார்ப்பன கும்பல். பெங்களூர், அஹமதாபாத், சூரத் ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்ட தொடர் குண்டு வெடிப்பை தொடர்ந்து தீவிரவாதம் பெருகிவிட்டதாகவும், அதை தடுக்க காங்கிரஸ் அரசு தவறி விட்டதால் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக பொடா சட்டத்தைக் கொண்டு வருவோம்,கூடுதலாக பொடாவை விட மிகக் கடுமையான சட்டத்தைக் கொண்டுவருவோம் எனக் கொக்கரிக்கிறது பாசிச பார்ப்பன கும்பல். பா.ஜ.க -வின் குரலை ஆதரிக்கும் வண்ணம் பொடா சட்டத்திற்கு ஆதரவான குரல் தற்போது ஒலிக்கத் துவங்கியிருக்கிறது. இதுவரை மக்களின் அடிப்படைப் பிரச்சனையைப் பற்றி வாய்த்திறக்காத அப்துல்கலாம் பொடா வேண்டுமென்கிறார். மக்களின் கடும் எதிர்ப்பாலும், ஜனநாயக சக்திகளின் போராட்டங்கள் வழியாகவும் தூக்கி எறியப்பட்டு குடுவைக்குள் அடைக்கப்பட்டிருந்த பொடா பூதம் மீண்டும் எட்டிப் பார்க்க துடிக்கிறது. தமிழகத்தில் பார்ப்பன பாசிச ஜெயாவும், சோவும், கழிசடை திரைப்பட நடிகன் சரத்குமாரும் பொடா சட்டம் தேவை என கொக்கறிக்கின்றனர். பொடாவிற்கெதிரான குரல் தமிழகத்தில் இன்னும் ஒலிக்கத்துவங்கவில்லை. பொடா சட்டத்தில் தண்டிக்கப்பட்ட வைகோ இன்னும் வாய்த்திரக்கவில்லை. நக்கீரன் ஆசிரியர் கோபால், சுபவீரபாண்டியன், நெடுமாறன் மற்றும் மாவோயிச போராளிகள், ம.தி.மு.கவினர் சிலரும், தமிழ் தேசிய இயக்கங்களை சேர்ந்தவர்களும் பொடா கொடுமையை சந்தித்தனர்.

தமிழகம் முழுவதுமே பொடா சட்டத்திற்கு உட்பட்ட பகுதி என மிரட்டிய பாசிச ஜெயாவின் கட்சியை தமிழக மக்கள் விரட்டியதோடு, பொடாவையும் பொசுக்கினர். இந்நிலையில் 13.9.08 புதுடெல்லியில் நடந்த தொடர் குண்டுவெடிப்பை தொடர்ந்து பாசிச அடக்குமுறைச் சட்டங்களை கோரும் கோரிக்கையில் அழுத்தம் அதிகரித்துள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் நக்சல்களும், இடது சாரி தீவிர அமைப்புகளும் மிரட்டலாக உள்ளனர் என்றும் சில மாநிலங்களில் மாநில அரசே இப்பிரச்சணையை கையாள முடியாத அளவிற்கு நக்சல் பிரச்சனை பெரிதாக உள்ளதென இரு தினங்களுக்கு முன் ஜனாதிபதி மாளிகையில் உரையாற்றினார் பிரதமர் மன்மோகன்சிங் இந்த நிலைமைகளை காரணம் காட்டி தீவிரவாதத்தை ஒடுக்க தனி அமைச்சகம் என்றும் புதிய வகைப்பட்ட பொடா என்றும் பொடாவை நவீனப்படுத்தி அடக்கு முறைச் சட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளது மன்மோகன்சிங் தலைமையிலான காங்சிரஸ் அரசு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டிய காரணத்திற்கும், பொடா

---

**முதல் பக்க தொடர்ச்சி**

தமிழகம் ஓங்கிக் குரல் கொடுக்க முடியாத சூழலை உருவாக்க ஏதுவாக,தேர்தல் கட்சிகளின் செயல்பாடுகள் குறுகிப் போக, ஈழதமிழர்களுக்காக போராடுவது வெற்று ஆர்ப்பாட்டமாக அடங்கிப் போனது வரலாற்று ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க ஆகிய சக்திகள் காலாவதியாகிப்போக, ஈழத்தமிழினம் தனது தார்மீக ஆதரவை பெறுவதில் கடும் பின்னடைவை சந்திக்கிறபடியால், இந்த சூழலை பயன்படுத்தி இராணுவம் மற்றும் இராஜதந்திர உதவிகளை செய்து வந்த இந்திய அரசு, ஓர் கூலிப்படையாக ஈழமண்ணில் பணியாற்றக்கூடிய துணிச்சலை வாரி வழங்கியது. இந்த துணிச்சலை வழங்கியப் பெருமை தமிழக அரங்கில் பணியாற்றும் மார்க்சிய – லெனினிய – மாவோவிய இயக்கங்களையும் சாரும்.ஒப்பிட்டளவில் ஈழப்பிரச்சனையில் தமிழ் தேசிய இயக்கங்கள் தங்கள் தகுதிக்குட்டப் பாத்திரங்களை செய்யத் தவறியதில்லை, ஆனால் அரசியல் ரீதியில் ஈழத்தமிழர்களுக்காக தார்மீக ஆதரவைப் பெற்றுத் தருவதற்கான போராட்டத்தை பலமாக கையில் எடுத்தால், அது விடுதலைப்புலிகளை ஆதரிப்பதில் கொண்டுபோய் விடக்கூடும் என்ற எண்ணமும் கூடுதலாக தமிழ் தேசிய இயக்கங்களின் அரசியல் கருத்துக்கு வலுசேர்க்கக் கூடும் என்ற எண்ணமும் மா-லெ-மாவோவிய குழுக்களில் ஏழாமலில்லை அப்படி எழுகின்ற எண்ணம் சிங்கள அரசின் இன அழித்தொழிப்பு வேலைகளுக்கு எதிராகவும் அதற்கு மறைமுகப் பங்காற்றும் இந்திய அரசின் செயல்பாட்டிற்கெதிராகவும் ஒருமித்த கண்டனங்களையும், எதிர்ப்புகளையும் உருவாக்க, அனைத்து தமிழ் தேசிய சக்திகளையும், ஜனநாயக சக்திகளையும் இப்பிரச்சனையின் பால் ஒன்றினைக்கும் அரசியல் பொறுப்புணர்வு அற்ற நிலைக்கு ஏதுவாக மார்க்சிய – லெனினிய – மாவோவியக்குழுக்கள் தமிழகத்தில் தங்களை தகவமைத்துக் கொண்டிருக்கின்றன.கால் நூற்றாண்டைத் தாண்டி புதிய பரிமாணத்தில் பயணிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈழ அகதிகள், ஈழ விடுதலை, தமிழக மீனவர்கள் மீதான துப்பாக்கி சூடு, இந்திய அரசின் தலையீடு, ஈழ ஆதரவை காரணம் காட்டி தடா,பொடா என்ற ஒடுக்குமுறை ஆகிய பிரச்சனைகளின் பால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை கைப்பற்றி தலைமை தாங்க வேண்டிய வரலாற்றுப் பாத்திரத்தை கைவிடும் வேலையை மா-லெ-மாவோவிய குழுக்கள் தன்னகத்தே கொண்டு உள்ளன. இதன் உடனடி விளைவானது ஈழ விடுதலையை படுகுழிக்கு அனுப்பவும், தமிழக மீனவர் மீதான சிங்கள இராணுவத்தின் கொலைவெறி தாக்குதலையும் கூட கண்டிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த போக்கின் பலனை இந்திய அரசு நன்கு புரிந்துகொண்டதால் தான் ஈழத்தில் தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்கும் வேலைக்கு தனது இராணுவத்தை கூலிப்படையாக அனுப்பும், தார்மீகப் பலத்தை அது பெறுகிறது.

இதற்கெதிராக தமிழக மீனவர்களும், மா-லெ-மாவோவியக் குழுக்களும் தமிழ் தேசிய, பெரியாரிய, தலித் அமைப்பினரும் ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து போராடும் போது தான், ஈழத்தில் மூக்கை நுழைக்காத வேலையை இந்தியா செய்யும். ஏனெனில் ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்துபோய் தனக்கான தேசிய அரசை அமைத்துக் கொள்வதில் அறிவியல் பூர்வமானத் தீர்வை முன்வைத்தது மார்க்சியம் – லெனினியமே. எனவே நமது ஒன்றுபட்ட போராட்டமே தனிஈழம் மலர்வதை தருவிக்கும். இந்திய புரட்சியை விரைவுப்படுத்தும் அத்தகைய அரசியல் அழுத்தத்தை தோற்றுவிக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம். ஈழத்தின் மீதான இந்தியாவின் தலையீட்டை தகர்ப்போம்.

**செவ்விழி**

சட்டத்திற்கெதிராக எதிர்ப்பைக் காட்டியதிலும் தமிழ் தேசிய இயக்கங்கள்,பெரியாரிய இயக்கங்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் , பத்திரிக்கையாளர் கோபால் ஆகியோரின் பங்களிப்பை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

இந்நிலையில் மீண்டும் வரவிருக்கும் இவ் ஆள்தூக்கி சட்டங்களின் கீழ் உடனடி விளைவை சந்திக்கக் கூடிய சக்திகளாய் இருப்பவர்கள் தமிழ் தேசிய இயக்கங்களும், பெரியாரிய இயக்கங்களும் ஜனநாய சக்திகளும், இஸ்லாமிய மக்களும், பத்திரிக்கையாளர்களும் புரட்சிகரச் சக்திகளும் ஆவர்.

தமிழகத்தின் தன்னுரிமைக்கு குரல் கொடுப்பவர்களையும் ஈழத்தமிழ் ஆதரவாளர்களையும் நசுக்க வரவிருக்கிறது புதிய பொடா. சிறுபான்மை இஸ்லாமிய மக்களையும், தனியார் மையம் - தாராள மையம் - உலகமயமாக்கலை எதிர்க்கும் முன்னணிப் புரட்சிகர சக்திகளையும் காவுக் கொள்ளக் காத்திருக்கும், புதிய வடிவில் வரவிருக்கும் இப் பாசிச கருப்புச் சட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிய ஓரணியில் திரள்வோம், புதியப் பொடாவை பொசுக்குவோம். **- தமிழ்**

**இந்து பயங்கரவாதத்தின் எதிரி மாவோவியமே!** - அடுத்த இதழில்

---

**நான்காம்பக்கம் தொடர்ச்சி**

தூண்டப்பட்டது. இதைத் தொடர்ந்து டெமாஸ்காவிலும், டெஹ்ரானினும் பெய்ரூட்டிலும், காசாவின் குப்பங்களிலும் இஸ்லாமிய மக்களின் கோபத்தீ கொழுந்து விட்டெரிந்தது ஆப்கான் முதல் பாலஸ்தீனம் வரை, இந்தோனேசியா முதல் லிபியா வரை அனைத்து நகரத் தெருக்களிலும் கோபத்துடன் இறங்கிய இஸ்லாமிய மக்கள் டென்மார்க்கின் உணவுப்பொருட்கள் உட்பட அந்நாட்டின் தூதரகங்கள், கடல் கடந்த வணிக நிறுவனங்கள் ஆகிய டென்மார்க்கின் அடையாளச் சின்னங்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தனர். பாகிஸ்தானிலும் லிபியாவிலும் ஆட்சி பீடத்திலிருந்தே அமெரிக்க அடிவருடிகள் ஆர்ப்பாட்டக்காரர்களை படுகாயப்படுத்தினர். இவ்வாறு இஸ்லாமிய மக்களின் கோபத்தீ சூறாவளியாய் சுழன்றடித்தது. பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிய கதையாக ஒரு புறத்தில் கேலிச்சித்திரத்தை வெளியிட்டு கலவரத்தைத் தூண்டிவிட்டு அதே நேரத்தில் ஈரானும், சிரியாவும் முறைதவறிய வழிகளைக் கையாண்டு, மத உணர்வை கிளப்பிவிட்டு, சுயலாபம் பெறுவதாக அமெரிக்க அரசுச் செயலாளர் கண்டலினா ரைஸ்அவதூறு மூட்டைகளை அவிழ்த்து விட்டார்.

இவ்வாறு மேற்கு உலகுக்கும் கிழக்கு உலகுக்கும் இடையில் பதட்டத்தை ஏற்படுத்தி எண்ணற்றோரின் உயிர் இழப்பீற்க்கு காரணமான **தலைப்பாகையில் குண்டு** என்ற அதே கேலிச்சித்திரத்தை பார்ப்பன இந்துமத வெறி நாளேடான தினமலர் திட்டமிட்ட உள்நோக்கத்துடன் வெளியிட்டு சிறுபான்மை இஸ்லாமியரின் மீது ஆத்திரத்தைத் தூண்டிவிட்டுள்ள தோடு தமிழகத்தை சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான கலவர பூமியாக்க முயல்கிறது.

டென்மார்க் பத்திரிகை 2005ம் ஆண்டு செப்டம்பர் முப்பதாம்தேதி வெளியிட்ட கேலிச்சித்திரத்தை நான்கு ஆண்டுகள் கழித்து அதே செப்டம்பர் மாதம் இப்போது தமிழகத்தில் வெளியீட வேண்டிய அவசியம் தினமலருக்கு ஏன் ஏற்பட்டது. இதே செப்டம்பர் 9/11 நாட்களில் தான் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டது. அல்கொய்தாவின் இந்தத் தாக்குதலைச் சாக்காகக் கூறித்தான் பயங்கரவாதத்திற்கு எதிரானப் போர் என்ற பெயரில் இஸ்லாமிய மக்களுக்கு எதிராகவும், இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராகவும், அந்நாடுகளை பொறுக்கி நாடுகள் என முத்திரைக்குத்தி ஆக்கிரமிப்பு போர்களை தொடுத்து வருகிறது அமெரிக்கா. ஈரானுக்கும் சிரியாவுக்கும் எதிராக ஆக்கிரமிப்பு போர்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதோடு இதை நாகரிகங்களுக்கு இடையிலான மோதல் என்றும் வர்ணித்து வருகிறது.

மேலான நாகரிகத்தை கொண்டவர்களாக பற்றிக்கொண்டும் இவர்கள் ஈராக்கிலும். ஆப்கானிஸ்தானத்திலும், பாலத்தினத்திலும் கைது செய்தோரை இழிவுப்படுத்தும் வகையில் சித்ரவதை செய்து வருகின்றனர். இஸ்லாமியர்கள் புனிதமாக கருதும் குர்ரான் மீது சிறுநீர் கழிக்கவும் மலங்கழிக்கவும் செய்தனர். குர்ரானை பூட்சுகால்களால் உதைத்தனர். குர்ரானை கிழித்து கழிவறையில் எறிந்தனர்.தொழுகைக்கு முன்னால் தங்களை சுத்தம் செய்துகொள்ள தண்ணீர் தர மறுத்தனர். அதற்கு பதில் அவர்கள் மீது அசிங்கங்களை பூசி அவமானப்படுத்தினர் மிகவும் மெல்லிய ஆடை அணிந்த பெண் விசாரணை அதிகாரிகள் தனது " மாதவிடாய் " ரத்தத்தை தடைசெய்யப்பட்ட கைதிகள் உடம்பில் பூசினர். வழித்தவறிய பாலுறவில் ஈடுபட நிர்பந்தித்தனர் நீண்ட நேரம் நிர்வாணத்தில் நிறுத்தி ஆண்களையும் பெண்களையும் தார்க்குச்சி கொண்டு வன்புணர்சிக்கு ஆட்படுத்தினர். இஸ்ரேலியக் கொடியை உடுத்திக் கொள்ள வைத்தனர். அபுகிரைப சிறையில் கொடுமை தாங்க மாட்டாத ஒரு பெண் சிறைவாசி தனது தனியறை மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி தன்னை கொன்று விடும்படி தனது தோழர்களுக்குச் செய்தி அனுப்பினார். மசூதிகள் இடிக்கப்பட்டன காயமுற்றவர்களை கூட்டமாக இழுத்துச் சென்று திறந்த வெளியில் மிக அருகாமையிலிருந்து சுட்டுக்கொன்றனர். அமெரிக் இஸ்ரேலிய கொடுங்கோலர்கள் ஒற்றைத் துருவ உலக மேலாதிக்கத்தை நிலை நிறுத்த மானுடத்தின் மீது தொடுக்கப்பட்ட கொடுத்தாக்குதல்கள் இவை. இது தான் பயங்கரவாதத்திற்கு எதிராக இவர்கள் நடத்தும் போரின் லட்சணம்.

இவ்வாறு திட்டமிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியமும் இஸ்ரேலிய அடிவருடிகளும் இஸ்லாமிய பீதியை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரால் கிளப்பி விடுவதைப் போன்றே தமிழகத்தில் இந்து பாசிசத்தின் ஊன்றுகோலாகத் திகழும் தினமலரும் 4 ஆண்டுகளுக்கு முன்னர் டென்மார்க்கில் வெளிவந்த அதே கேலிச்சித்திரத்தை , அதே செப்டம்பர் மாதத்தில் வெளியிட்டு தனது எஜமானவர்களான சி.ஐ.ஏ.வுக்கும், மொசாத்துக்கும் தொண்டூழியும் புரியம் துரோகத்தனத்தை செய்யத் துவங்கியுள்ளது.

அதுவும் பி.ஜே.பி.யும் சங் பரிவாரமும் இந்து மத வெறியை பரப்புரை செய்து வரும்நேரத்தில் குஜராத்திலும், பெங்களூரிலும், ராஜஸ்தானிலும் தொடர் குண்டுகள் வெடித்து பலர் கொல்லப்பட்டு இருக்கும் சூழலில், இஸ்லாமிய பீதியை கிளப்பிவிட திட்டமிட்டு தினமலர் இந்த கேலிச்சித்திரத்தை பிரசுரித்துள்ளது. அணு ஆயுத ஒப்பந்தத்திற்கு எதிராகவும், உலக மயமாக்குதலுக்கு எதிராகவும் இந்தியாவில் வளர்ந்து வரும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை திசைத்திருப்பி சிறுபான்மை மக்களுக்கு எதிராக பகைத்தீயை ஊட்டி வேடிக்கை பார்க்க விரும்புகிறது பார்ப்பனிய தினமலர். அண்மையில் இஸ்ரேலுடன் டாட்டா நிறுவனம், இராணுவத்திற்றான தளவாடப் பொருட்களை தயாரித்துக் கொடுக்கும் தொழிற்சாலையை நிறுவ ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள தகவல் இந்தியாவில் இஸ்ரேலின் செல்வாக்கு வளர்வதற்கு அளிக்கப்பட்டு வரும் ஆதரவை அம்பலப்படுத்துகிறது தினமலரின் இந்த கேலிச்சித்திரம். அமெரிக்க ஏகாதிப்பத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு தொண்டூழியும் புரிவதில் இஸ்ரேலிய சியோனியமும் பார்ப்பனிய இந்து மதவெறி பாசிசமும் கைகோர்த்து செயல்படும் ஆபத்து அம்பலமாகிறது. இந்த பாசிச சக்திகளை வீழ்த்தி அனுப்ப புரட்சிகர, தேசபக்த, ஜனநாய சக்திகள் ஐக்கியப்படவேண்டிய அவசிய அவசர நேரம் இது .

---

**இதழ் நன்கொடையாளர்கள்**
**விஞ்ஞானி கோபால்-500, தஞ்சை சூரியன் -140, தியாகு,பெ.தி.க-சைதை-50, பொன்.மாயவன், பள்ளிக்கரணை-100**

**கடிதத்தொடர்புக்கு : ஆசிரியர், தொழிலாளர் மக்களாட்சி,எண்.45,சாமியார் தோட்டம்,ஆலந்தூர் சாலை, சைதை,சென்னை-15, அலைபேசி -9380976378,9841168164.**

**E-mail:makkalatchi@yahoo.com**

செப்டம்பர் 1-15.2008 THOZHILALAR MAKKALATCHI, Tamizh Fortnightly,RNI TC No.TNTAM/17828/17.12.07,R.Dis.No.2265/07

# தினமலரின் பயங்கரம்

## கோவை ஈஸ்வரன்

வெறிப்பிடித்த இந்து மத பார்ப்பன பாசிஸ்ட்டுகளின் ஊதுகுழலாக விளங்கும் திமிர்பிடித்த நாளேடான "**தினமலர்** " உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான இஸ்லாமியர்களால் வரலாற்று ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் நன்கு உணரப்பட்டு போற்றப்படும் தீர்க்க தரிசி முகமது நபிகளின் உருத்தோற்றத்தை கீழ்தரமாக சித்தரிக்கும் வகையில் செப்டம்பர் 2 நாள் அன்று ஒரு கேலிச்சித்திரத்தை வெளியிட்டதன் மூலம் சிறுபான்மை முஸ்லீம்களின் கோபத்தீயை கனன்றெழச் செய்துள்ளது.கோபத்தால் இஸ்லாமியர்கள் கோவை, சென்னை, சேலம், திருச்சி போன்ற மாவட்டங்களில் கன்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதன் பின்னர் மெதுவாக விழித்துக்கொண்ட தமிழக அரசு கேலிச்சித்திரத்தை வெளியிட்ட தினமலர் ஏட்டின் நிருபரான திலிப் குமார் என்பவனை கைது செய்தது. கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிப்பதற்காக முன்பிணை பெற்றுள்ள ராகவன் உட்பட இப்பத்திரிக்கையின் மூன்று உரிமையாளர்கள் சுதந்திரமாக உலவுகின்றனர். சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் உள்நோக்கத்துடன் மத உணர்வை புண்படுத்தும் வகையில் கேலிச்சித்திரத்தை வெளியிட்டதற்காக செப்டம்பர் 5ம் நாளன்று திருச்சி, வேலூர் உள்ளிட்ட நான்கு மையங்களிலிருந்து பதிப்பிக்கப்படும் இதழ்களில் மன்னிப்புக் கோரி ஒரு செய்தியையும் வெளியிட்டுள்ளது தினமலர் !, குதிரை குழியைத் தோண்டியதோடு குப்புறத் தள்ளியக் கதையாக இந்த தறிகெட்ட நாளேடு, முஸ்லீம்கள் நடத்திய ஆர்பாட்டங்களை சன்தொலைக்காட்சி ஒலிப்பரப்பியதால் தனது விற்பனைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என கூறி சன் தொலைக்காட்சிக் குழுமத்தின் மீது வழக்கொன்றையும் தொடுத்துள்ளது. இந்த கேலிச்சித்திரத்தை தினமலர் வெளியிட காரணம் என்ன? அதிலும் குறிப்பாக செப்டம்பர் மாதம் வெளியிட்டது ஏன்? இக்கேலிச்சித்திரத்தின் பின்னனி என்ன? இதை தமிழக மக்கள் ஆழமாக புரிந்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும். அபுகிரைப் சித்திரவதைகளுக்கு பின்னர், பலுஜாவில் நடத்தப்பட்ட மனிதப் படுகொலைக்கு பின்னர், ஈராக்,ஆப்கான் மக்கள் பேரழிவுக்கு ஆட்படுத்தப்பட்ட பின்னர், ஈராக்கில் அமெரிக்கா கண்ட படுதோல்விக்குப் பின், ஈரானுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துவதற்கு எதிராக உலக மக்களின் எதிர்ப்பு வலுத்து வரும் நிலையில், அமெரிக்காவின் வலிமை பொருந்திய ஐரோப்பிய கூட்டாளி நாடுகளில் ஒன்றாகவும் இஸ்ரேலின் நலன்களுக்கு சேவகம் புரியும் வகையில் உளவுப் பொறியமைமையைக் கொண்ட நாடான டென்மார்க்கிலிருந்து உலக மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்காக, ஈரான் மற்றும் சிரியா போன்ற நாடுகளை ஆக்கிரமிப்பதற்கான நியாயங்களை கிளப்புவதற்காக ஒரு கருத்துப் பரப்பலை ஏற்படுத்த இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாத் சதித்திட்டம் தீட்டியது.

வியக்கத்தக்க முறையில் இதற்கான பொறுப்பு டென்மார்க்கின் நாளேடான ‘‘ ஜைலாண்ட்ஸ் போஸ்ட்" என்ற பத்திரிகையின் கலாச்சார பிரிவு ஆசிரியரான ஃப்ளெமிங் ரோஸ் என்பவருக்கு அளிக்கப்பட்டது அவர் கேலிச்



சித்திரங்களை வரையும் ஓவியர்களுக்கு அவர்களின் கற்பனைக்கு ஏற்ப முகமது நபியின் தோற்றத்தை சித்தரிக்கும் கேலிச்சித்திரங்களை வரைந்து தருமாறு ஆணையிட்டார். வரைந்தளிக்கப்பட்ட 12 கேலிச் சித்திரங்களில் ஒன்றுதான் தலைப்பாகைக்குள் குண்டு என்ற பிரச்சனைக்குரிய கேலிச்சித்திரமாகும் டென்மார்க்சில் உள்ள தெய்வ நிந்தனைக்கான சட்டத்தையும் துச்சமென மதித்து 2005ம் ஆண்டு செப்டம்பர் 30ம் நாளன்று இக்கேலிச் சித்திரத்தை "ஜைலாண்ட் போஸ்ட் " பத்திரிக்கை வெளியிட்டது.

இச்செய்தியின் ஆசிரியரான ப்ளெமிங் ரோஸ் என்பவர் இஸ்ரேல் அரசுடனும், படுமோசமான வலது சாரி கட்சியுடனும் நெருங்கிய தொடர்புக் கொண்டவர். மிகவும் அவப்பெயரைக் கொண்ட அராபிய எதிர்ப்பு – சியோனியக் கருத்தியல் வாதியான டேனியல் பைப்ஸ் என்பவரின் நேர்காணலை உலகே அறியும் வண்ணம் வெளிப்படுத்தியதன் மூலம் இஸ்ரேலுடனான இவரது உறவை அறிந்துக்கொள்ள முடியும்.உக்ரேனைச் சேர்ந்த யூதரான இவர் முதலில் மாஸ்கோவில் செய்தியாளராகவும், பணிபுரிந்தார் இவர் கம்யூனிசத்திற்கு பிந்திய ரஷ்யாவில் அதிகாரம் செலுத்தியவரும், ரஷ்ய – இஸ்ரேல் இரட்டைக் குடியுரிமை பெற்றவரும், மொசாத்துடன் கூடிக் கொண்டு கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்தவரும்மான இஸ்ரேலினால் கடவுளின் குழந்தை என்று போற்றிப் புகழப்பட்ட போரிஸ் எல்சின் வாழ்க்கை வரலாற்று நூலை டேனிஸ் மொழியில் மொழியாக்கம் செய்தவர். 1990 முதல் 1999 வரை வாஷிங்டனில் சுற்றுலாப் பத்திரிகையாளராகவும் பணியாற்றியவர். அப்போது கிளிண்டனுடன் சீனாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டவர். இப்படிப்பட்ட பின்னணியை உடைய இவர் பத்திரிக்கைத் துறையின் அறிவைப் பெற்றிராத இவர் ஜையிலாண்ட் போஸ்ட் பத்திரிகையின் கலாச்சாரப் பிரிவு ஆசிரியராக நியமிக்கப்பட்டு மத்திய கிழக்கிலிருந்து புலம்பெயர்ந்து வந்தோருக்கு எதிராகவும், அங்கு வாழ்ந்து வரும் முஸ்லீம்களுக்கு எதிராகவும் பகை உணர்வுக்குத் தீனிபோடும் வகையில் சக்திவாய்ந்த பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டவர். இத்தகைய படுமோசமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இவர் தான், கேலிச்சித்திரச் சர்ச்சையின் வில்லன் ஆவார்.

கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலான பதட்டத்தை அதிகரிக்க மொசாத்,ஃபளேமிங்கை ஒரு பகடைக்காயப் பயன்படுத்திக் கொண்டது.ஈரானுக்கெதிராகக் கருத்துப் பரப்பலை கட்டவிழ்த்துவிடும் மையமானப் பத்திரிக்கையான ஜைலாண்டு போஸ்ட் பத்திரிகையில் வெளியிடப்பட்டபோது இதன் மீதான இஸ்லாமிய மக்களின் பிரதிபலிப்பானது எல்லைக்குட்பட்டதாகவே இருந்தது. இதனால் ஏமாற்றமடைந்த, இஸ்ரேலுக்கு வெளியேயுள்ள யூதர்களுடன் கூடிக்கொண்டு செயல்படும் தொண்டர் படையான சயானின் என்ற அமைப்பினால் ஊக்குவிக்கப்பட்டு மேற்கத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த 14 நாடுகளில், அதே ஆண்டில் பிப்ரவரி ஒன்று, இரண்டு தேதிகளில் ஒரே நேரத்தில் இக்கேலிச்சித்திரம் மீண்டும் பதிப்பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அராபிய மக்களிடையே ரகசியமாகச் செயல்படும் மொசாத் உளவாளிகளால் பெருந்திரள் மக்கள் எதிர்ப்பானது திட்டமிட்டுத்

Owned and Published by Xavier Kabilan,from No.8,Munusamy Street, Bharathi Block,Jafferkhan Pettai,Chennai - 83.
And Printed by K.P.Thiyagarajan at Kalaiyaram Printers,No.182,Bells Road,Chepakkam,Chennai -5.Editor-Sengoal.